**இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழக அபிவிருத்தித்திட்டம் (எஸ்ஈயூடிபி) – கட்டம் 1 பீ - 2013**

---

தென் கிழக்கு பல்கலைக்கழக அபிவிருத்தித் திட்டம் (எஸ்ஈயுடிபி) – கட்டம் 1 பீ இன் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளைப் பின்தொடர்ந்து. எனது பணியின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அராபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைத் நிதியத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 திசெம்பர் 20 ஆந் திகதிய 836 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டம் அமுலாக்கப்பட்டுள்ளது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

செயற்திட்ட கடன் உடன்படிக்கையின் பிரகாரம், கல்வி அமைச்சு செயற்திட்ட அமுலாக்கல் முகவராகும். அம்பாறை மாவட்டத்தில் உள்ள தென் கிழக்கு பல்கலைக்கழகத்தினை அபிவிருத்தி செய்வதற்காக பிரதேச, தேசியரீதியான தேவைகளைப் பிரதிபலிக்கின்ற செம்மையான பட்டப்படிப்பினை வழங்குவதன் மூலம் சமூக, அபிவிருத்திக்கு உதவுதல், பொருளியல் வளர்சியை இலங்கையில் ஏற்படுத்தும் அதே நேரம் மாணவர் தொகையை அதிகரித்தல், தேவையான புதிய கேள்வி ஆற்றல் மிக்க பட்டப்படிப்பு கல்வி அபிவிருத்தி திட்டங்களை அறிமுகப்படுத்தல். புதிய பீடக், கட்டிடங்கள், நூல் நிலையம், கற்றல் வள நிலையம், மாணவர், உத்தியோகத்தர்களுக்கான தங்குமிட வசதிகள் நலனோம்பு வசதிகள், தற்போது உள்ள கட்டிடங்கள் வெள்ள அபாயம் உடையவனாக இருப்பதால் வெள்ள அபாயம் குறைந்த கட்டிடங்களை உருவாக்கல் என்பனவற்றை ஏற்படுத்தல். என்பனவே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 1,812 மில்லியன் இதில் குவைத் டினார் 3 மில்லியனிற்கு சமமான ரூபா 1,421 மில்லியன் குவைத்து நிதி அராபிய பொருளியல் அபிவிருத்தி வழங்குவதற்கு உடன்பட்டுள்ளது. இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பு ரூபா 391 மில்லியன் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2012 செப்தெம்பர் 01 ம் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன் 2015 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்ய வேண்டுமென பட்டியலிடப்பட்டுள்ளது.

## 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக்கூற்றுக்களை தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

---

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்

மீளாய்வு, கொடுக்கல்வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் அத்துடன் அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்கு அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்குமேற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான்பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பத்தகு தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழான பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் சொல்லப்பட்ட அளவீடுகளிற்கிணங்க மேற்கொள்ளப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும், உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா, என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுலாக்கலிற்காக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க, செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தத்துவங்களிற்கேற்ப நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டனவா என்பதும்,

(எ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக்கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டிருந்தனவா என்பதுமாகும்

## 3. அபிப்பிரயாம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய,

(அ) செயற்திட்டம் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கேற்ப 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள். அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களிற்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமா என்பதும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக்கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிக் கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் 31 திசெம்பர் 2013 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்ட செலவினம் ரூபா 20,174,124 ஆக இருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 29,953,484 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பை பின்வரும் கூற்றுக் காட்டுகின்றது.

| விபரம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான செலவினம் | | 2013 திசெம்பர் 31 இல் திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2013 ரூபா | 2012 ரூபா | ரூபா |
| ஆலோசனை | | | |
| - உள்ளூர் | 8,979,900 | 9,779,360 | 18,759,260 |
| - வெளிநாடு | 1,772,511 | - | 1,772,511 |
| நிலையான சொத்து | | | |
| - அலுவலக உபகரணம் | 12,640 | - | 12,640 |
| செயற்திட்ட முகாமைத்துவ செலவினம் | 9,409,073 | - | 9,409,073 |
| மொத்தம் | 20,174,124 | 9,779,360 | 29,953,484 |

## 5. நிதி, மற்றும் செயலாற்றல் மீளாய்வு

### 5.1 நிதிகளின் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டின் பிரகாரம், உயர் கல்வி அமைச்சின் செலவினத் தலைப்பு 171 இன் கீழ் ரூபா 100,000,000 இச் செயற்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்தது. நிதி ஏற்பாடு, அவற்றின் மீது ஏற்பட்ட செலவினம் மற்றும் நிதிகளின் குறைபயன்பாடு என்பவற்றின் விபரங்கள் கிழே தரப்படுகின்றன.

| செலவின தலைப்பு விபரம் | 2013 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு | மீளாய்வாண்டின் போது பயன்படுத்திய தொகை | குறை பயன்பாட்டுத் தொகை | குறை பயன்பாட்டின் சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| வெளிநாட்டு உதவி கடன் | 15,000,000 | 1,772,511 | 13,227,489 | 88 |
| மீள் நிரப்பத்தக்க வெளிநாட்டு உதவி – கடன் | 15,000,000 | 8,979,900 | 6,020,100 | 40 |
| வெளிநாட்டு உதவி சம்பந்தமான உள்நாட்டு நிதிகள் | 70,000,000 | 9,421,713 | 60,578,287 | 86 |

(ஆ) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் கடன் பயன்பாட்டு வீதம் கடன் உடன்படிக்கைத் திகதியிலிருந்து இரு வருடங்கள் கடந்த பின் குறைந்த பயன்பாடான 1.78 சதவீதமாக இருந்தது. செயற்திட்டத்தின் நிதியளிப்பு பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதான நிதிகளின் பயன்பாடு மற்றும் பயன்படுத்திய நிதிகள் என்பவற்றின் சில முக்கிய புள்ளி விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | **கடன் உடன்படிக்கையில் வழங்க வேண்டுமென உடன்பட்ட தொகை** | | **மீளாய்வாண்டின் போது பயன்படுத்திய தொகை** | **2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்திய தொகை** | |
|---|---|---|---|---|---|
| | **குவைத் டினார்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **குவைத் டினார்** | **ரூபா மில்லியன்** |
| குவைத் நிதி | 3.00 | 1,421.57 | 10.75 | 0.04 | 20.53 |
| இலங்கை அரசாங்கம் | 0.36 | 391.09 | 9.42 | 0.02 | 9.42 |
| | 3.36 | 1.812.66 | 20.17 | 0.06 | 29.95 |

## 5.2 பௌதீக செயலாற்றல்

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், 2012 மார்ச் 19 இல் செயற்திட்ட செயற்பாடுகள் தொடங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும் அத்தகைய செயற்பாடுகள் 2012 செப்தெம்பர் 01 இலேயே தொடங்கப்பட்டுள்ளது. முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், நிர்மாண வேலைக்கான ஆலோசனை வேலைகள் 35 சதவீதத்தினைக் கொண்டிருந்ததுடன் சிவில் நிர்மாண வேலைகளில் முன்னேற்றங்கள் எதுவும் அறிக்கையிடப்படவில்லை.